RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22480

OPEN ACCESS

# குறுந்தொகைப் பாடல்களில் மெய்ப்பாடுகள்

அ. ஆன்சி [அ, *], எஸ். அலக்ஸ் ஜேக்கப் [ஆ *]

[அ] தமிழ்த்துறை அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, தொலையாவட்டம் - 629157. (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி- 627012) தமிழ்நாடு, இந்தியா

தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம் -629165. (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி- 627012) தமிழ்நாடு, இந்தியா.

# Kurunthogai Padalkalil Meipadukal

A. Ancy [a,*], S. Alex Jacob [b]

[a] Department of Tamil, Annai Velankanni College, Tholayavattam-629157, (Manonmaniam Sundaranar University, Tirunelveli – 627012), Tamilnadu, India

[b] Department of Tamil, Nesamony Memorial Christian College, Marthandam- 629165, (Manonmaniam Sundaranar University, Tirunelveli – 627012), Tamil Nadu, India

* Corresponding Author: ancyat@gmail.com

Received: 02-07-2022
Revised: 17-09-2022
Accepted: 27-09-2022
Published: 09-10-2022

Check for updates

## ABSTRACT

Reality is the sensation that comes out of our body. Some of the emotions that arise in our mind cannot be expressed directly to others. We can know ourselves by observing or by facial expressions. This is supported by facts. Sangam literature also contains verisimilitudes. This paper examines the truths mentioned by Tolkappiyar in Kurunthogai, one of the Sangam literary texts.

**Keywords:** Sangam literature, Kurunthogai, Emotions,

## முன்னுரை

நம் உடலில் தோன்றி வெளிப்படும் உணர்வே மெய்ப்பாடாகும். நம் மனதில் தோன்றும் சில உணர்வுகளை பிறருக்கு நேரடியாக வெளிப்படுத்த முடியாது. நம்மை நன்றாக உற்றுநோக்கியோ அல்லது முகபாவனைகளை வைத்தோ அறிந்து கொள்ள முடியும். இதற்கு துணைபுரிபவை மெய்ப்பாடுகள் ஆகும். சங்க இலக்கிய நூல்களிலும் மெய்ப்பாடுகள் இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான குறுந்தொகையில் தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடுகள் குறித்து ஆராய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

## குறுந்தொகை

சங்க இலக்கியங்களில் பலராலும் விரும்பப் பெற்ற இலக்கியமாகவும், உரையாசிரியர்கள் பலராலும் மிகுதியாக மேற்கோள் காட்டப்பெற்ற இலக்கியமாகவும் குறுந்தொகை விளங்குகிறது. குறுந்தொகை 400பாடல்களைக் கொண்டுள்ளது. பாடல்கள் 4 அடிச் சிற்றெல்லையும் 8 அடிப்

பேரெல்லையும் கொண்டவை. குறுந்தொகையில் உள்ள பாடல்கள் ஒரே காலத்தில் எழுதப்பட்டவை அல்ல. வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு புலவர்களால் எழுதப்பட்டவை.

## மெய்ப்பாடுகள்

மெய்யில் தோன்றி வெளிப்படும் உணர்வு மெய்ப்பாடு. மெய்ப்பாட்டில் செய்யுளுக்குரிய இன்றியமையாத உறுப்புகளில் ஒன்று என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். செய்யுளில் அமைந்த சுவையே மெய்ப்பாடாகும்.

## எண்வகை மெய்ப்பாடுகள்

மெய்ப்பாடுகள் எட்டு வகைப்படும் என்று தொல்காப்பியர் தம் நூற்பாவில் பதிவு செய்துள்ளார்.

"நகையே யழுகை யிளிவரன் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்

றப்பா லெட்டா மெய்ப்பா டென்ப"

என்ற நூற்பாவில் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடாகும் (Tholkapiyar, 2008).

## நகை

நகை என்பதற்கு அணிகலன், சிரிப்பு என்ற பல பொருள்கள் உள்ளன. ஆனால் தொல்காப்பியர் நகை என்பதற்கு சிரிப்பு என்று பொருள் கூறுகிறார். நகை தோன்றும் பொருள் நான்கு வகைப்படும்.

"எள்ள லிளமை பேதமை மடனென்

றுள்ளப் பட்ட நகைநான் கென்ப"

என்று கூறுவதன் மூலம் எள்ளல், இளமை, பேதமை, மடன் என்று கூறப்பட்ட நான்கும் நகை தோன்றும் பொருளாகும் (Tholkapiyar, 2008). குற்தொகைப் பாடலில்,

"மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்

கொடியோர்த் தெறுஉம் என்ப யாவதும்

கொடியர் அல்லர், எம் குன்றுகெழு நாடர்

பசைஇப் பசந்தன்று நுதலே;

ஞெகிழ நெகிழ்ந்தன்று தடமென் தோளே" (குறு. 87)

என்ற பாடலடிகளில் மடமை காரணமாகத் தோன்றும் நகைப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் தலைவியின் மன வருத்தத்தால் நுதலில் பசப்பும், தோள்களில் நெகிழ்தலும்; ஏற்பட்டன. அறியாமை கொண்ட மக்களோ தலைவியின் நோய்க்கு தலைவனே காரணம் என்று கூறினர். ஆனால் தலைவி மெலிவதற்கான காரணம் தலைவன் அல்ல. தலைவனைத் தான் விரும்பியதால் ஏற்பட்ட வேறுபாட்டால் தோன்றியவை. மக்கள் அறியாமையாகிய மடன் நெஞ்சத்தோடு தலைவியின் நிலையறிந்து நகைத்தனர் என்பதை மேற்காண்; பாடலடிகள் வழி உணர முடிகிறது (Puliyur Kesigan, 2010).

## அழுகை

அழுகை என்பது துன்பம், வலி, பயம் போன்ற பல காரணங்களால் நிகழும். அழுகையாகிய மெய்ப்பாடு குறித்து,

"இழிவே யழிவே யசைவே வறுமையென

விரிவில் கொள்கை யழுகை நான்கே" (தொல்.பொருள் : 249)

என தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுகிறது. இழிவு, இழவு, அசைவு, வறுமை என்று சொல்லப்பட்ட நான்கும் கேடில்லாத கோட்பாட்டினையுடைய அழுகை தோன்றும் பொருளாகும். குறுந்தொகைப் பாடல்களிலும் அழுகையாகிய மெய்ப்பாடு பயின்று வந்துள்ளது (Tholkapiyar, 2008).

"கன்றும் உண்ணது காலத்தினும் படாது

நல்லான் தீம்பால் நிலத்து உக் காஅங்கு

எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது

பசலை உணீஇயர் வேண்டும்

திதலை அல்குல்என் மாமைக் கவினே" (குறு. 27)

என்ற பாடலில் நல்ல பசுவின் பால் தன் கன்றும் குடிக்காது கறக்கும் கலத்தினும் விழாது, நிலத்தில் சிந்தியதைப் போல உடல் எனக்கும் ஆகாது, என் தலைவனுக்கும் பயன்படாது என் நலத்தை இழந்தேன் என்று தலைவி கூறுவதன் மூலம் அழுகை தோன்றும் பொருள்களுள் ஒன்றான இழவு என்பது பயின்று வந்துள்ளது.

## இளிவரல்

மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்று சொல்லப்பட்ட நான்கும் இளிவரல் தோன்றும் பொருள்களாகும் என்பதை

"மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு

டியாப்புற வந்த இளிவரல் நான்கே" (தொல்.பொருள்.250)

என்னும் நூற்பாவின் வழி தொல்காப்பியர் சுட்டியுள்ளார் (Kulanthai, 2007). குறுந்தொகைப் பாடலிலும் இளிவரல் பயின்று வந்துள்ளது.

அதுகொல் தோழி! காம நோயே?

வதிகுருகு உறங்கும் இன்நிழல் புன்னை

உடைதிரைத் திவலை அரும்பும் தீநீர்

மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்

பல்இதழ் உண்கண் பாடுஒல் லாவே" (குறு. 5)

மருத நிலத்தில் வாழும் நீர்ப்பறவைகள் தம்மிடம் வந்து உறங்குவதற்கு ஏதுவான நிழலைத் தருவன புண்னை மரங்கள். அதன் அரும்புகள் கடல் அலைகளின் துளிகள் பட்டு மலர்வன. இத்தகைய கடல் சார்ந்த நிலத்தின் தலைவன் பிரிவால் காமநோயுற்ற தலைவியின் தாமரை மலர் போன்ற மெல்லிய கண்கள் இரவு உறங்காமல் வருந்தின. இவ்வாறு வருத்தம் காரணமாக இளிவரல் என்ற மெய்ப்பாடு தலைவியிடத்தே உருவாகியது என்பதை மேற்காண் பாடலடிகளின் வழி உணரலாம் (Balasubramaniyam, 2007).

## மருட்கை

தொல்காப்பியர் தம் நூற்பாவில் மருட்கை என்னும் மெய்ப்பாடு குறித்து,

புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு

மதிமை சாலா மருட்கை நான்கே” (தொல்.பொருள்:251)

என பதிவு செய்துள்ளார். இதில் புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்று சொல்லப்பட்ட நான்கும் அறிவோடு பொருந்தாத மருட்கை தோன்றும் பொருளாகும்.

“நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்

கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்

காலொடு வந்த கமம்சூல் மாமழை

ஆர்அளி இலையோ? நீயே பேரிசை

இமயமும் துளக்கும் பண்பினை,

துணைஇலர், அளியர், பேண்டிர், இ஀து எவனோ?” (குறு.158)

கார்காலத்து பெருமழையினால் மலைபாம்புகள் கூட இறந்து போகும்படி பேரிடியோடு மழை பெய்தது. அந்த மழையானது தன்னுடைய வலிமையினைத் தன்னினும் வலியோரிடம் காட்டுதல் வேண்டும். அவ்வாறு இன்றி தன் துணைவரை பிரிந்திருப்போரிடமும் இரங்கத்தக்கோருமாகிய பெண்டிரிடம் அதன் வலிமையைக் காட்டுதல் சிறுமையுடைய செயல் என்று கூறுவதில் மருட்கை தோன்றும் பொருள்களில் ஒன்றான சிறுமை இப்பாடலில் இடம்பெற்றுள்ளன.

## பெருமிதம்

தம்முடைய தகுதிகளின் நிறைவைப் பெருமையுடன் பிறருக்கு உணர்த்துவது பெருமிதம் ஆகும்.

“கல்விதறுகண் புகழ்மை கொடையெனச்

சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே” (தொல்.பொருள்:253)

கல்வி, தறுகண்மை, புகழ்மை, கொடை என்று சொல்லப்பட்ட நான்கும் பெருமிதம் தோன்றும் பொருளாகும்.

“அரில்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி

குண்டுநீர் இரஞ்சிக் கெண்டை கதூஉம்

தண்துறை ஊரன் பெண்டினை ஆயின்

பலஆ குகநின் நெஞ்சில் படரே!

ஓவாது ஈயும் மாரி வண்கைக்

கடும்பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி

கொன்முனை இரவுஊர் போலச்

சிலஆ குகநீ துஞ்சு நாளே” (குறு.91)

என்ற பாடலில் கடை ஏழு வள்ளல்களில் அதியமான், நெடுமான் அஞ்சி நீண்ட நாள் வாழக் கூடிய அரிய நெல்லிக்னியை வழங்கினான். அந்த நன்றியை மறவாத ஔவை அவன் கொடைச் சிறப்பு, படைச்சிறப்பு பற்றி பாராட்டினார். நெடுமான் அஞ்சியின் போர்முனையினைச் சார்ந்துள்ள ஊர்மக்கள் சிலநாட்களே தூங்க முடியும். பலநாட்கள் தூங்கமுடியாது, காரணம் போர் முழக்கம்

தொடர்ந்து நடப்பதால் இதில் மன்னரின் புகழ், கொடைச்சிறப்பு புகழ்ந்து கூறப்பட்டதால் பெருமிதம் என்னும் மெய்ப்பாடு அமைந்துள்ளது.

## முடிவுரை

மனிதனின் உள்ள உணர்வுகள் அவனது உடலின் வழியாக வெளிப்படுகின்றன. பழமையான இலக்கண நூலாகத் திகழும் தொல்காப்பியத்தின் வழி தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள மெய்ப்பாடுகளை குறுந்தொகைப் பாடல்களின் வழி அறிந்து கொண்டோம்.

## References

Balasubramaniyam, K.M. (2007) Kurunthogai, Bharathi puthagalayam, Chennai, India

Kulanthai, (2007) Tholkapiyam Porulathikaram, poompuhar pathipagam, Chennai, India

Puliyur Kesigan, (2010) Kurunthogai Moolamum uraiyum, Saratha pathipagam, Chennai, India

Tholkapiyar, (2008) Tholkapiyam Porulathikaram, mullai bharathi, thanjavur, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License